

விளை நிலங்களா? விலை நிலங்களா?

நம் பாரதநாடு, ஒரு விவசாய நாடு என்பது நாமெல்லாம் நன்கு அறிந்த ஒன்றாகும். இனம், மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவை வெவ்வேறாக இருந்தாலும், தொழில் என்பது விவசாயம் மட்டுமே. எல்லாவற்றுக்கும் அடிப்படையான விவசாயத் தொழிலே நம் எல்லோரையும் இணைத்தது.

அப்படிப்பட்ட விவசாயத்தின் தற்போதைய நிலை என்ன? நாம் எண்ணிப் பார்த்தோமானால், கண்ணீர் தான் மிஞ்சி நிற்கும். கிராமங்களில் விவசாயம் குறைந்து கொண்டே வருகிறது. விவசாயம் செய்யும் விளை நிலங்களின் பரப்பளவும் குறைந்து கொண்டே வருகிறது. காரணம், விவசாயத்தில் சரியான அளவில் விவசாயிக்கு தான் பயிர் செய்யும் பயிர்களின் மூலம் லாபம் கிடைப்பதில்லை என்று கூறப்படுகிறது.

"உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது" என்பது வழக்குமொழி ஆகிவிட்டது.

அப்படியே விவசாயி தனது விவசாய நிலத்தில் ஏதேனும் பயிர் செய்தால் அதற்கு செலவிடப்படும் விவசாயக் கூலித்தொகை, உரம், பூச்சிமருந்து, களைஎடுப்பு மற்றும் தண்ணீர் பாய்ச்சலுக்கான மின்சாரச் செலவு, மேலும், அதற்கான அறுவடைச் செலவு எல்லாமும் இன்று பன்மடங்கு அதிகரித்துவிட்டது. இவ்வாறு தனது கையில் உள்ள பணம், மேலும், விவசாயத்துக்கான கடன்தொகை எல்லாம் போக விவசாயிக்கு ஏதேனும் இலாபம் கிடைக்கின்றதா என்றால், "இல்லை" என்ற ஒற்றைச் சொல்லே பதிலாகும். இதுவே இன்றைய விவசாயத்தின் நிலையாகும்.

விவசாயம் லாபம் இல்லாததால் விவசாயிகளின் மனநிலையில் வேறு தொழிலுக்கு மாறும் சிந்தனை வருகிறது. நகரை ஒட்டியுள்ள கிராமங்களில் விளைநிலம் வைத்திருப்போர், ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் உரிமையாளர்களை அணுகுகிறார்கள் அல்லது விவசாயம் செய்து நஷ்டமடைந்த விவசாயிகளை ரியல் எஸ்டேட் செய்பவர்கள் நெருங்கி ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபடலாம் என்றும் அதன்மூலம் லட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்கலாம் என்றும் ஆசைவார்த்தை கூறுகின்றனர். ஏற்கனவே விவசாயத்தில் லாபம் இல்லாத விவசாயி அதிக லாபம் தரும் ரியல் எஸ்டேட் தொழிலில் இறங்கிவிடுகிறார்.

உதாரணமாக, ஒரு விவசாய நிலம் 1 ஏக்கர் ரூ 1 லட்சம் என பேசி, ரியல் எஸ்டேட் அதிபர் அதை

பிளாட்டுகளாக பிரித்து அதனை ஏக்கர் 2 லட்சம், அதற்கும் மேலும் விற்கிறார். மேலும், விவசாயி கஷ்டப்படாமல் அவருக்கு ஏக்கருக்கு 1 லட்சம் 2 லட்சம் என கிடைப்பதால் அதிலேயே திருப்தியடைந்து விடுகிறார். காலம் காலமாக வாழ்வளித்து வந்த நிலங்களின் மீது அவர் கொண்டிருந்த பாசம் பணத்துக்காகப் பறந்துவிடுகிறது. எனவே, லாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு தனது விளை நிலத்தை விற்பனை செய்துவிடுகிறார். விளைவு, களிமண் பூமியாக இருந்த விளை நிலங்கள் கான்கிரீட் கட்டடங்களாக மாறி விடுகின்றன. மனிதன் தடம்பதித்து நடந்த மண் பாதைகள், தார், சிமிண்ட் சாலைகளாக மாறிவிடுகின்றன.

இப்படியே ஒவ்வொரு விவசாயியும் தனது விளை நிலங்களை ரியல் எஸ்டேட் தொழிலுக்கு விற்று விட்டால், நாளை நமக்கும், நம் பிள்ளைகளுக்கும் தேவையான அரிசி, சோளம், கம்பு, தினை, கேப்பை, கோதுமை ஆகிய தானியங்களுக்கு நாம் எங்கே போக முடியும். இந்த நாட்டில் விளைவிக்கா விட்டால் இதை வெளிநாட்டிலிருந்தா இறக்குமதி செய்யமுடியும்?

விவசாயம் நடைபெற்றால், நிலமில்லாத ஏழைக் கூலித் தொழிலாளிக்கு, உழுதல், நடவு செய்தல், களை எடுத்தல், உரமிடுதல், பூச்சிக் கொல்லி தெளித்தல், பின்னர் அறுவடை செய்தல் என வருடத்தில் சுமார் எட்டு மாதங்கள் வேலை இருந்து கொண்டே இருக்கும். எனவே, கிராமப் பொருளாதாரமும் வளர்ச்சி அடையும். கூலித் தொழிலாளர்களும் பயன்பெறுவர். இதை எல்லாம் விடுத்து, விவசாய நிலங்களை, வீட்டு மனைகளாக

ஆக்கிவிட்டால், நிலத்தை விற்றவர் மற்றும் வாங்கிய இருவர் மட்டுமே பயன்பெறுவர். நம் விவசாயிகள் கண்களை விற்று சித்திரம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்றால் அது மிகையில்லை.

நம் அரசாங்கங்களானவை, இப்போது உள்ளதைவிட அதிகமாக விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க்கடன், உரம், பூச்சிமருந்து, அதற்கான உபகரணங்கள் ஆகியவற்றை மிகக் குறைந்த விலையில் வழங்க வேண்டும்.

மேலும், நிலத்திற்கான பாசன வசதி மற்றும் இலவச மின்சார வசதி ஆகியவை கண்டிப்பாய் கூடுதலாக செய்து தரப்பட வேண்டும். விவசாயிகளுக்கு முழுமையாக இலவசமாகவும் வழங்க முன்வரவேண்டும்.

மஹாராஷ்டிரா மாநிலத்தில் விதர்ப்பா மாவட்டத்தில் விவசாயிகள் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கில் தற்கொலை செய்து கொள்ளும் அவலநிலை இப்போது உள்ளது. இது இந்த நாட்டின் மிகப் பெரிய கேவலமாகும். பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவியில் கால் பங்கு நம் விவசாயிகளுக்கு உதவினால், நம் விவசாயிகள் சிறப்பாக உற்பத்தி செய்து நம் நாட்டை உற்பத்தியில் எல்லா விதத்திலும் தன்னிறைவு அடையச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, அரசாங்கமானது விளை நிலங்களை விளாட்டுகளாக மாற்றுவதையும் வேறு தொழிலுக்கு மாற்றுவதையும் ஒரு 10 ஆண்டுகளுக்குத் தடை விதித்து,

விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, நல்ல உற்பத்தி மூலம், விவசாயிகள் நல்ல லாபம் ஈட்டி அவர்களது வாழ்வை சிறக்கச் செய்வதன் மூலம் 'இந்தியா ஒரு விவசாய நாடு' என்ற நற்பெயரையும் காப்பாற்ற முடியும் என்பது திண்ணம்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.
வீணில், உண்டு கொழுத்திருப்போரை நிந்தனை செய்வோம்.

❖❖❖



அன்னை ஓர் ஆலயம்

உலகில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தெய்வங்களை வணங்குவது என்பது நடைமுறை. தெய்வத்தை வணங்குவதைத் தவிர ஒவ்வொருவரும் போற்றிப் பாராட்ட வேண்டிய வாழும் தெய்வம் ஒன்று உண்டென்றால் அது அவரவரின் பெற்ற தாய் என்பதே ஆகும்.

தாயிற் சிறந்ததோர் கோவிலும் இல்லை என்கிறோம். அந்தத் தாய் எனும் தெய்வத்தை எவ்வாறு நடத்துகிறோம். நாம் நமது தாயை வணங்கி அவர் தம் விருப்பு வெறுப்புகளைக் கண்டு, அவரின் வழிகாட்டுதலில் வீட்டினையும், வீட்டில் உள்ளோரையும் வளர்த்தால், அந்த வீடானது எல்லா வகையிலும் சிறப்பானதாக அமையும் என்பதில் ஏதும் ஐயமில்லை.

நாட்டினை தாய்நாடு என்கிறோம். நமது நாட்டில் பூமியை தாய் மண் என்கிறோம். அத்தகைய தாயின் பெருமையை உணர்ந்தவர்கள் எல்லாம் இன்று அரசியல்

இசை என எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குவதும் மேலும், தான் சிறப்பிக்கப்படுகின்ற இடங்களில் எல்லாம் தனது தாயை மறக்காமல் நினைகூர்வது என்பதும் நடைமுறையாக உள்ளது.

புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். தனது தாய் சத்யபாமா அவர்களை நினைவுகூராத நிகழ்வுகளே இல்லை எனலாம். முத்தமிழறிஞர் கலைஞர் தனது தாய் அஞ்சுகம் அம்மையாரைப் பெருமைப்படுத்தாத நிகழ்வே இல்லை. நம் மேஸ்ட்ரோ, இசைஞானி இளையராஜா எந்த நிகழ்ச்சி ஆனாலும் தனது தாய் சின்னத்தாயி அவர்களை நினைவு கூராத நிகழ்வே இல்லை எனலாம்.

தாய்க்கும் நமக்குமான உறவு தொப்புள் கொடி உறவு எனச் சொல்வோம். தாய் கருவுற்ற நாளிலிருந்து 10 மாதங்கள் வரை தன் வயிற்றில் சிசுவைச் சுமக்கிறாள். அத்தாய் உண்ணும் உணவிலிருந்து அருந்தும் தண்ணீர் வரை சிசுவுக்கும் சேர்த்தே உண்கிறாள். அந்தக் காலங்களில் தனக்கு ஏதேனும் நோய், நொடி என வந்தால் அது தன் வயிற்றில் உள்ள சிசுவை பாதிக்காதவாறு மருத்துவம் செய்துகொள்கிறாள். குழந்தை பிறந்த பின்பும், அதனை சீராட்டி வளர்ப்பதுடன், தான் உண்ணும் உணவையும் பார்த்து பார்த்து சாப்பிடுகிறாள். குழந்தைக்கு ஒவ்வாமை உள்ள உணவுகளை அவள் உண்ணமாட்டாள். தனக்கு பால்சுரக்கக்கூடிய உணவு வகைகளை உண்டு தாய்ப் பாலைப் பெருக்கி குழந்தைக்கு ஊட்டுவாள். கிராமங்களில் வயல்வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் கைக்குழந்தைகள் இருப்பின் அதையும் உடன் எடுத்துச்சென்று, மரங்களில்

கயிறு கட்டி அதில் தனது சேலைகளை தொட்டிலாக்கி குழந்தைகளைத் தூங்க வைப்பர். குழந்தை பசியினால் கத்தினால் உடன் வயலிலிருந்து வெளியில் வந்து குழந்தைக்கு தனது தாய்ப்பாலை ஊட்டிவிட்டு மேலும் தன் வேலையைத் தொடருவாள். ஆக, அவளது பசி என்பது அவளுக்கு இரண்டாமிடம் தான்.

இவ்வாறு தாயின் சிறப்பினை சொல்லிக் கொண்டே போகலாம். தாயின் சிறப்பும் எண்ணிலடங்காதது என்பது மிகையல்ல.

இவ்வாறாக நம்மை கண்ணின் இமைபோல் காத்து, வளர்த்து ஆளாக்கி, படிக்கவைத்து ஒரு மனிதனாகவோ, ஒரு மனுஷியாகவோ ஆக்கியபிறகு இன்றைய இளைஞர்கள், இளம்பெண்கள் தன் தாயிடம் எவ்வாறு நடந்து கொள்கின்றனர். தாயானவள் ஏதேனும் அறிவுரைகள் சொன்னால் நம் பிள்ளைகள் கேட்பதில்லை. தனது அனுபவங்களை வைத்து வாழவேண்டிய வழிமுறைகளைச் சொன்னால் இக்கால இளம் தலைமுறையினர் எங்கே கேட்கின்றனர். குறைந்தபட்சம் அவர்களை எதிர்த்துப் பேசாமலும், அவரிடம் எதிர்வாதம் செய்யாமலும் இருந்தாலே போதும். இக்கால இளைஞர்களுக்கு தாயின் அறிவுரை என்றாலே எட்டிக் காயாக கசக்கிறது. பின்னர் வாழ்க்கையில் கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டால் அப்போதுதான் தாயின் சொல்லினை மதிக்கத் தவறி விட்டோமே எனத் தோன்றும். காதல் தோல்வியாகட்டும், கல்யாண வாழ்க்கை கசப்பதிலாகட்டும் அங்கே இளைஞர்களை ஆதரிப்பதில், வழிகாட்டுவதில்,

அமைதிப்படுத்துவதில் எவரைவிடவும் தாயே முன்னிற்பாள். நாம் ஒவ்வொருவரும் நமது பிள்ளைகளுக்குத் தாயின் சிறப்பியல்புகளை வாய்ப்புக் கிடைக்கும்போது சொல்லி வளர்க்க வேண்டும்.

எனது நெடுநாளைய நண்பர் திரு. சி.ஜெயப்பிரகாஷ் நண்பர்களால் ஜே.பி. என அன்பாக அழைக்கப்படுபவர். 40 வயதுதான் இருக்கும். தாயின் மீது மாசற்ற அன்பு கொண்டவர். தன் தாயின் வளர்ப்பில் கனிந்தவர். அவரது பேச்சில் பெரும்பாலும் தாய்மை பற்றிய வாதங்கள் இருக்கும். அவர் ஒரு வணிகர். உழைப்பால் உயர்ந்தவர். வயது சிறியதானாலும், வாழ்க்கையில் சிகரத்தைத் தொட்டார். ஒவ்வொரு வருடமும் அன்னையர் தினம் மே 12ஆம் நாள் நடைபெறும். நண்பர் ஜே.பி. அவர்கள் ஒவ்வொரு அன்னையர் தின நாளிலும், அவரது தாயின் நினைவாக நல்ல காரியங்கள், ஏழையர்க்கு உதவிகள் என வழங்குவார். தன் வாழ்க்கையின் இந்த உயர்வுக்கு வழிகாட்டிய தாயின் நினைவாக 'அன்னையர் தினம்' எனும் குறும்படத்தினை தானே தயாரித்து தானே நடித்து இயக்கி வெளியிட்டார். 30 நிமிடங்கள் ஓடக்கூடிய குறும்படம் ஆனாலும் தாய்மைபற்றி ஒரு புத்தகத்தில் சொல்வதை விடவும் மிகவும் அருமையாக தனது படைப்பாற்றலையும், தன் நடிப்பாற்றலையும் இதன் மூலமாக வெளிப்படுத்தினார்.

அவரது எண்ணமானது தாய்மையை எல்லோரும் போற்றிப் புகழவேண்டும் என்பதே. நூல்கள் படிப்பதைக் காட்டிலும் ஒரு சிறிய திரைப்படமானது சொல்லவந்த கருத்தை ஒரு சில காட்சிகளில் சொல்லிவிடும். நண்பர்

ஜே.பி. போன்ற இளைஞர்கள் ஊருக்கு ஒருவர் இருந்தால் போதும், தாய்மை சிறக்கும்.

அன்னை என்றால் பெற்ற அன்னை மட்டுமல்ல, ஜெர்மானியராய் பணிசெய்ய இந்தியா வந்து, இந்தியர் களுக்கு சேவை செய்த தெரஸா அவர்கள் உயரிய பட்டமான "அன்னை" பட்டம் பெற்று "அன்னை தெரஸா" எனப் புகழ்பெற்றார். மேலும் நோபல் பரிசும் பெற்றார்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் தனது சேவையை மக்களுக்கு வழங்கினார். அவர்தம் தொண்டால் வளர்ந்ததே ராமகிருஷ்ண மடம். அவரது சேவைக்கு உறுதுணையாக இருந்து வாழ்க்கையை அர்ப்பணித்த சாரதாதேவி அவர்கள் பின்னாளில் "அன்னை சாரதா தேவி" எனப் புகழடைந்தார் அல்லவா.

தாய்மையைப் போற்றுவோம்.

❖❖❖



மாமியாரும் சாமியாரும்

மதுரை நகரிலிருந்து திருப்பரங்குன்றம் அருகில் உள்ள ஒரு மடத்திற்கு நான் செல்வதுண்டு. அங்கே ஒரு சுவாமிகள் அடக்கமாகி இருக்கிறார். அந்த மடத்திற்கு வாய்ப்புக் கிடைக்கும்போது நான் செல்வதுண்டு; அங்கே, மடத்தைப் பற்றி அறிந்தவர்கள் தங்களது பிறந்தநாள், திருமணநாள், மற்றும் விசேஷ நாட்களுக்கு மதிய உணவுக்காக பணம் செலுத்தி விடுவார்கள். அதை வைத்து மடத்திலுள்ளோர் சமையல் செய்து தினசரி 50 பேருக்குமேல் மதிய உணவு இலவசமாக வழங்குவார்கள். இலவசம் என்றால் சாதாரண சாப்பாடு இல்லை, சிறப்பான சாப்பாடு வழங்குவார்கள். அப்படி வழங்குவதால் எனக்கும் ஆர்வம். சில நாள்கள் உணவுக்காக பணம் செலுத்தி நானும் சாப்பிட்டு வருவதுண்டு.

வருகை தருவோரில் தினசரி 20இலிருந்து 25 பேர் வரை காவி உடையணிந்த சாமியார்களாகவே இருப்பார் கள். மனிதர்களில் எத்தனை வேறுபாடுகள்! ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், ஏமாற்றங்கள், கசப்புகள், வெற்றிகள், நல்லவைகள் எல்லாமே வந்து போகின்றவைதான். வெற்றிகள் கிடைத்தால் மனிதன் வாழ்க்கையை சந்தோஷமாக அமைத்துக் கொள்கிறான். அதில் திறமையுள்ளவன் மேலே சென்று உச்சத்திற்குச் சென்று விடுகிறான்.

ஆனால் வாழ்க்கையில் தோல்வி கண்டவர்கள், அவரவர் மனம் சொல்கிறபடி வெந்து, வெதும்பி, வாழ்க்கை நடத்துவதே சிரமமாக கஷ்டப்படுகின்றனர்.

நான் அங்கே தினசரி வந்து செல்பவர்களில் சில சாமியார்களை சந்தித்து அவரவர் வாழ்க்கை, ஏன் இப்படி (துறவு இல்லாத) சாமியார்களாக ஆனார்கள், அதன் காரண, காரியங்களைக் கேட்போம் என எண்ணி ஒருசில சாமியார்களை அணுகி என் எண்ணத்தை வெளிப்படுத்தி னேன். சிலர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள், அவர்களது பார்வையில் என்னை துச்சமாகப் பார்த்தார் கள். பின்னர் ஏதும் சொல்லாமலே நகர்ந்துவிட்டனர். ஒரு சில சாமியார்கள் நான் சொல்வதை ஏதும் கேட்காமலேயே 'வயிறு நிறைந்த' சந்தோசத்தில் நகர்ந்து விட்டனர். ஒரே ஒரு சாமியார் மட்டும் (இளைஞராக இருந்தார்) நான் சொன்னதை முழுமையாக காது கொடுத்துக் கேட்டார். அவரது கண்களிலே கேட்பதில் ஒரு ஆர்வம்; நம்மை ஒரு மனிதன் மதித்து விசாரிக்கிறாரே என நினைத்தாரோ என்னவோ. "வாருங்கள் அந்த மரநிழலில் உட்காருவோம்"

என என்னை அழைத்தார். நானும் மகிழ்ச்சியுடன் அவருடன் மரநிழலில் உட்கார்ந்தேன்.

சாமியார் : நீங்கள் யார், எதுக்காக என்னைப் பற்றி கேட்கிறீர்கள், சினிமா எடுக்கவா, பேப்பரில் போடவா என கேள்விகளை அடுக்கினார்.

நான் : சினிமா ஐடியா எல்லாம் இல்லை. பேப்பரிலும் போடுவதாக இல்லை. நான் ஒரு ஆரம்பகட்ட எழுத்தாளன். உங்கள் வாழ்க்கை பற்றி சுவாரஸ்யமாக ஒரு கட்டுரை எழுத நினைக்கிறேன். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சில எண்ணங்கள் கனன்று கொண்டே, "நீறு பூத்த நெருப்பாக" இருக்கும். நீங்கள் என்னிடம் உங்களைப் பற்றியும், கடந்து வந்த பாதையைப் பற்றியும் சொன்னீர்கள் என்றால் அதை சுவைபட என்னால் எழுத முடியும். மேலும் (நீங்கள் அனுமதித்தால்) என்னால் ஆன சன்மானமும் தருகிறேன் என்றேன்.

சாமியார் : நான் திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு எனும் ஊரைச் சேர்ந்தவன். பள்ளிப் பிடிப்பினை முடித்து வேலை தேடினேன். திண்டுக்கல்லில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைக்கு பதிய எண்ணி, எனது பள்ளிச் சான்றிதழுடன் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் சென்றேன். அதற்கான வரிசையில் நின்றேன். எனக்கு முன்னர் எனது வயதில் ஒரு பெண், நல்ல நிறம், சிறுவயதே ஆனாலும், சேலை உடுத்தி, பார்க்க நல்ல குடும்பப்பாங்காக இருந்தாள். இருவருமே கவுண்டரில் அடுத்தடுத்து பதிய இருந்தோம். வரிசையில் எனக்கு முன்னர் இருந்தார். அவர் வேலைவாய்ப்பை பதிவு செய்யும்

உதவியாளரிடம் தனது ஊர், விலாசங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சொல்ல சொல்ல எனது ஊரைச் சேர்ந்தவர் என்றும், பெயர் கண்ணம்மா என்றும் தெரிந்தது. நாங்கள் அடுத்தடுத்த தெருவில் வசித்து வருவது தெரிந்தது.

பின்னர் எனது முறை வந்தபோது, உரிய பதிவுகளைச் செய்துவிட்டு நகர்ந்தேன். அவர் அருகில் உள்ள மரநிழலில் தனது பதிவுகளைச் சரிபார்த்து பைலில் வைத்துக் கொண்டிருந்தார். எனக்கு மனதில் ஒரு சிறிய உற்சாகம். நமது ஊர்க்காரப் பெண் நம்மைப் போலவே வேலை தேடி வந்துள்ளார். சிறிது பேசுவோமே என எண்ணி அவரிடம் நான் எனது விவரங்களைத் தெரிவித்து நாம் ஒரே பகுதியைச் சேர்ந்தவர்கள், ஆனால் நான் உங்களைப் பார்த்ததில்லை என பொதுவாக பேச்சுக் கொடுத்தேன்.

அவர் எல்லா விஷயங்களையும் பொறுமையாக கேட்டுக் கொண்டவர், நான் உங்களை இதற்கு முன் பார்த்த தில்லை என நான் கூறியவுடன், அவர் உங்களை நான் பலமுறை ஊரில் பார்த்திருக்கிறேன் என்றார் மெல்லிய குரலில்.

அவர் பேச்சு, அவர் பேசிய விதம், அவரின் அமைதியான சுபாவம் ஆகியவை என் மனதுக்குப் பிடித்திருந்தது. மேலும். பலமுறை ஊரில் பார்த்த பெண் என்னிடம் வந்து தெரிந்தவர் போல் காட்டிக் கொள்ளாதது ஆகிய குணம் என்னை ஏதோ செய்தது. தனக்குத் தெரிந்த ஒருவர் வந்திருந்தும், அதை பெரிதுபடுத்தாமல் தனது பெண்மையின் காரணமாக நடந்து கொண்டது எனக்கு

அவர் மீது ஒரு நல்ல அபிப்ராயத்தையும் ஈர்ப்பையும் ஏற்படுத்தியது.

அவர் அவரது வீட்டில் ஒரு பெண் மட்டுமே, சகோதரர் ஒருவர் மற்றும் அம்மா உண்டு. அவர் அங்குள்ள ஒரு ஹோட்டலில் பணிபுரிந்து வந்தார். வேலை நேரத்தில் அவரது சாப்பாட்டு பிரச்சினை தீர்ந்துவிடும். வீட்டுக்கு என அம்மாவிடம் சிறிது பணம் கொடுப்பார். இந்த நிலையில் இப்படியே எங்களது நட்பு வளரத் தொடங்கியது. எங்களது ஊரில் நாங்கள் சந்தித்துக் கொள்ள வாய்ப்பில்லை. காரணம், சிறிய ஊர். எந்தப் பக்கம் திரும்பினாலும் என்னுடைய உறவினர்களோ, அல்லது அவரது உறவினர்களோ இருப்பார்கள். எனவே எங்கள் சந்திப்பை உள்ளூரில் தவிர்த்தோம். நாங்கள் சந்திக்க நினைத்தால் திண்டுக்கல்லுக்கு ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அங்கே சந்திப்போம்.

எங்களது சந்திப்பு தொடர்ந்தது. நான் கண்ணம்மாவிடம் பேசப்பேச நான் அவர் வயப்பட்டேன். கண்ணம்மாவும் என்னிடம் மிகவும் பிரியமாக நடந்து கொண்டார். இவ்வாறு எங்களது நட்பு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. ஒருவரை ஒருவர் நேசிக்க ஆரம்பித்து விட்டால், அங்கே நடப்பது எல்லாம் நல்லதாகவே தெரியுமல்லவா? அவ்வாறுதான் எனக்கும் இருந்தது.

எப்படியோ எங்கள் விஷயம் எனது வீட்டிற்கும், அவரது அம்மாவுக்கும் தெரிந்து விட்டது. 'உண்மை ஊருக்கும், உலகுக்கும் ஒருநாள் தெரியத்தானே செய்யும்.'

ஆனால் நாங்கள் இருவருமே அதைப்பற்றி கவலைப் படவில்லை, என்னைக் காட்டிலும் கண்ணம்மா மிகவும் தெளிவுடன் இருந்தார். வாழ்ந்தால் உங்களுடன் இல்லையெனில் எனக்கு கல்யாணமே தேவையில்லை என பலசமயம் என்னிடம் சொல்லி எங்கள் காதலின் அழுத்தத்தைப் பதிவு செய்வாள். எனக்கும் அதே மனநிலைதான். அதைத்தான்,

கன்னியர் தம் கடைக்கண் பார்வை பட்டுவிட்டால்,
காளையர்க்கு மாமலையும் கடுகாகும்

என பாவேந்தர் சொன்னார் போலும்.

இந்நிலையில் எனது வீட்டில் பெண் பார்க்க ஆரம் பித்தார்கள். திருமணம் இப்போது எனக்குத் தேவையில்லை என மறுத்தேன். எனது தந்தையாரோ திருமணம் வேண்டாம், காதல் மட்டும் வேண்டுமா? என என்னிடம் ஆத்திரப்பட்டார். மேலும், கண்ணம்மாவின் தாயார் சரியில்லை, அந்த பெண்ணை மறந்துவிடு என குடும்பத்தில் என் தாய், தந்தையர் எவ்வளவோ சொன்னார்கள். ஆனால் எனக்கு கண்ணம்மா மேலிருந்த அன்பும், காதலும் அவர்களது பேச்சைக் கேட்கும் மனநிலையில் இல்லை. ஆனால் கண்ணம்மாவின் தாயாருக்கு எங்கள் காதலுக்கு ஆசீர்வாதம் உண்டு என கண்ணம்மா மூலம் தெரிந்து கொண்டேன்.

அடுத்து எனது வாழ்வில் திருப்பமாக எனது ஊரில் உள்ள கிறிஸ்துவ மிஷன் மருத்துவமனையில் தற்காலிகமாக வேலை கிடைத்தது. அந்த ஊருக்கு எனக்குக் கிடைத்த

சம்பளம் போதுமானதாக இருந்தது. நான் வேலை செய்து கிடைத்த சம்பளத்தை எனது தாய் தந்தையரிடம் கொடுத்தேன். அவர்கள் வாங்க மறுத்துவிட்டனர். காரணம், என் காதல் விவகாரத்தால் கோபத்தில் இருந்தார்கள் என எனக்கு தெரிந்தது.

எனக்கு வேலை கிடைத்து சம்பளம் வாங்க ஆரம்பித்து விட்டதால் கண்ணம்மா நாம் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்றும் எனது தாயார் சம்மதம் தெரிவித்துள்ளார் எனவும் கூறினாள். எனது குடும்பத்தில் எதிர்ப்பு, கண்ணம்மா குடும்பத்தில் ஒப்புதல், அந்தச் சமயத்தில் எனது நிலையானது இருதலைக் கொள்ளி எறும்புக்கு ஒப்பானது எனலாம். நாளாக, நாளாக கண்ணம்மா வீட்டில் எங்களது திருமணத்திற்கு அவசரப்படுத்தினார்கள். மேலும், கண்ணம்மா கண்கலங்கி ஒப்புதல் கேட்டபோது என்னால் மறுக்க முடியவில்லை. எனது வீட்டின் எதிர்ப்பையும் மீறி எங்கள் கல்யாணம் ஒரு கோவிலில் வைத்து எளிமையாக நடந்து முடிந்தது. என் வீட்டில் நுழையக்கூடாது எனச் சொல்லி விட்டார்கள். எனவே என் கண்ணம்மாவின் வீட்டிலேயே குடியேறினோம்.

எனது அன்புக்காதலி கண்ணம்மாவே மனைவியாய் வாய்த்து விட்டதில் எனக்கு நிறைய சந்தோசம். வாழ்க்கையில் நான் ஏதோ சாதித்துவிட்ட திருப்தி. வானத்தை எட்டிப் பிடித்ததைப் போன்ற ஒரு மகிழ்ச்சி. பிறகுதான் தெரிந்தது எனது மகிழ்ச்சி, திருப்தி எல்லாம் நிரந்தரமில்லை என்று. திருமணம் முடிந்த ஒருவாரம் முடிந்திருக்கும். நான் வேலைக்குப் புறப்பட்டபோது

கண்ணம்மா என் அருகில் வந்து, மாலை வேலை முடிந்து வரும்போது கொஞ்சம் (குவார்டர்) மதுபாட்டில் வாங்கி வாருங்கள் என்றாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. என் கண்ணம்மா வுக்கும் இல்லை. பின் எதற்கு அந்தக் கருமம். கண்ணம்மாவின் வற்புறுத்தலால் தலையாட்டிச் சென்று, வரும்போது கண்ணம்மாவும் எனது அத்தையும் அன்புடன் வரவேற்றார்கள். தொலையட்டும் என்று விட்டுவிட்டேன். கண்ணம்மா என் அத்தையிடம் நான் வாங்கி வந்த சரக்கைக் கொடுத்தாள். சிறிது நேரத்தில் எனது அத்தை யாரிடமோ பேசுவது போல் பேசிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தார். எனக்கு விசயம் விளங்கிவிட்டது. எனது அத்தைதான் மது அருந்துகிறார் என விளங்கியது.

•

நான் வேலைக்குச் செல்லும் ஒவ்வொரு நாளும் நான் எனது அத்தைக்கு ஒரு குவார்டர் வாங்கிவர வேண்டும். இது என் வீட்டில் வாடிக்கை ஆகிவிட்டது. எனக்கோ, உரலுக்குள் தலையை விட்டதுபோல் ஆகிவிட்டது. ஒருபுறம் என் காதல் மனைவி கண்ணம்மா, மற்றொருபுறம் என் அசிங்கமான அத்தை. இவ்வாறே நாட்கள், மாதங்கள் கடந்தன. பின்னர் ஒருநாள் ஒரு கட்டு சுருட்டு வாங்கி வாருங்கள் என கண்ணம்மா சொன்னாள். அந்த மதுவின் நாத்தமே சகிக்கவில்லை, இதில் சுருட்டு வேறா என சொல்லியவாறு வாங்கி வந்து கொடுத்தேன். என் கண்ணம்மாவிடம், "உன்னைக் காதலித்ததுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்" என்றேன். கண்ணம்மா ஏதும் பேசவில்லை.

நான் சரக்கு வாங்கிக் கொடுத்தால், அன்று என் கண்ணம்மா என்னிடம் வருவாள். சரக்கு வாங்கித் தராத நாட்களில் எனது அத்தை கண்ணம்மாவை தன் அறையிலேயே வைத்துக் கொள்வார்கள். ஆதரவற்ற தாயார் ஆனதால் கண்ணம்மா ஏதும் சொல்வதில்லை. நாட்கள் ஆக, ஆக எங்கள் குடும்ப சந்தோசம் குறைந்தது. மாமியாரை மதுமூலம் மகிழ்விக்க சம்பளம் போதவில்லை. நண்பர்களிடம் கடன் வாங்கினேன். ஆஸ்பத்திரியில் அட்வான்ஸ் வாங்கினேன். அதிலும் சரியாகவில்லை.

ஒருநாள் கண்ணம்மாவை அழைத்து பணப்பாற்றாக் குறை மற்றும் சிரமங்களை எடுத்துக் கூறினேன். எல்லாவற்றையும் கேட்ட கண்ணம்மா எனது அம்மாவை சந்தோசமாக வைத்துக் கொள்வது நமது கடமை அல்லவா என்றாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. மாமியாருக்கு தினமும் மதுவும் சுருட்டும் வாங்கிக் கொடுத்து வாழ்வது ஒரு வாழ்க்கையா என எண்ணி வருந்தினேன்.

"இதுவும் வேண்டுமடா, எனக்கு இன்னமும் வேண்டுமடா" எனப் பாடத் தோன்றியது.

மேலும் நாட்கள் சென்றன. நான் கையில் காசில்லாத நாட்களில் வீட்டில் பொய் சொல்லிவிட்டு ஆஸ்பத்திரியிலேயே தங்க ஆரம்பித்தேன். அடுத்த நாள் வீட்டுக்கு வந்தால் என் கண்ணம்மா ஏன் வீட்டிற்கு வரவில்லை என கேட்கமாட்டாள். மாறாக, அம்மா நீண்டநேரம் உங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். பாவம் என்பாள். நான் வீட்டுக்கு வராதது கண்ணம்மாவுக்குக் கவலையில்லை. அம்மாவுக்கு பாட்டில் வாங்கிக் கொடுக்காமல்

போனதில் வருத்தம் போலும். மேலும், அம்மா பாவம் வேறு, இனி இங்கிருந்தால் வாழ்க்கை திசைமாறிவிடும், எப்படியும் இந்த வீட்டை விட்டுத் தனியாக போய்விட வேண்டும் என்று எண்ணி விஷயத்தை கண்ணம்மாவிடம் கூறினேன். கண்ணம்மா பதிலேதும் சொல்லவில்லை. சிறிது மௌனத்திற்குப்பின் நாம் வேறு வீடு சென்றுவிடலாம். ஆனால் அம்மாவை யார் பார்த்துக் கொள்வார்கள் எனக் கூறி என்னை அதிர வைத்தாள். இருப்பினும் எனது வற்புறுத்தலுக்காக அவளது வீட்டுக்கு அருகிலேயே சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்தோம். சிறிது காலம் தொந்தரவு இல்லாமல் வாழ்ந்தோம். நான் வேலைக்குப் போன பின்பு எனது அத்தை என் வீட்டுக்கு வந்து கண்ணம்மாவிடம் பேசிவிட்டு எப்படியும் ஒரு 'குவார்டரை' தேற்றிக்கொண்டு சென்று விடுவாள். என் சம்பளத்தில் பெரும்பகுதி மதுவுக்கே போனது. குடும்பம் நடத்தவே சிரமமாக இருந்தது.

என்மீது மாறாத அன்பும், காதலும் கொண்ட மனைவி கண்ணம்மாவின் மறுபக்கம் என் மனதை என்னவோ செய்தது. என் மனதில் உள்ள குறைகளை பக்குவமாக அவளிடம் எடுத்துச் சொன்னேன். எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டவள் கடைசியில் "அம்மா பாவமில்லையா? ஏன் நீங்கள் அவர் கேட்டதை வாங்கிக் கொடுத்தால் குறைந்தா போய்விடுவீர்கள்" என என்னிடம் எதிர்க் கேள்வி கேட்டாள். எனக்கு பூமியே பிளந்து நான் உள்ளே செல்வதைப்போல உணர்ந்தேன். நான் கண்ணுக்குக் கண்ணாக காதலித்து மணம்புரிந்த என் கண்ணம்மாவா இப்படி! என மனம் வருந்தினேன். வாழ்க்கையில் எந்த சுகத்தையும் அனுபவிக்காமல்,